அனுமதித்தேன். ஆனால், அவர் பேச ஆரம்பித்ததிலே இருந்து, முழுக்க முழுக்க விசாரணை ஆணையத்தின்முன் உள்ள பொருள் குறித்தே அவருடைய கருத்துகள் வருகின்ற காரணத்தினால், அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இதுபோன்ற சூழ்நிலைகளைப் புரிந்துகொண்டு, விசாரணை ஆணையத்தில் இருக்கின்ற எந்தப் பொருள் குறித்தும், இந்த அவையில் கருத்துகள் தெரிவிப்பதைத் தவிர்க்க வேண்டுமென்று இந்த நிகழ்வின் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 11-30

(ஆ) கோவை மத்திய சிறையில் கைதிகள் தாக்கிக் கொண்டதில் ரமேஷ் என்பவர் உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை சிறையில் இரண்டு கைதிகள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டதில், ரமேஷ் என்ற கைதி இறந்திருக்கிறார். அவர் ஒரு விசாரணைக் கைதி. சிறைச்சாலை என்பது அங்கே இருக்கக்கூடியவர்களின் மனதை சீர்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய இடம். சிறைச்சாலை கொலைக் களமாக மாறக் கூடாது. சிறைச்சாலைகளைக் கண்காணிப்பவர்கள் போதுமான நடவடிக்கைகளை எடுக்காததால், இதுபோன்ற குற்றங்கள் நடைபெறுகின்றன. அரசியல்வாதிகளாகிய நாமும் சிறைச்சாலைகளுக்கு அடிக்கடி செல்ல வேண்டிய நிலை வருகிறது. பல போராட்டங்கள்; விவசாயிகளுக்கான பல போராட்டங்கள் போன்று மக்களுடைய பிரச்சினைகளுக்காகப் போராடினால்கூட இந்த அரசு எங்களைக் கைது செய்துவிடும். நாங்கள் உள்ளே போகக்கூடிய நிலைமை வரும். அதுவும் எங்களுக்குத் தெரியும். நீங்கள் வேறுவிதமாக எதையும் நினைத்துவிடாதீர்கள். அதுபோன்று நாங்கள் செயல்பட மாட்டோம். நிச்சயமாகச் சொல்கிறேன்; எந்தவிதத் தவறும் செய்துவிட்டு நாங்கள் சிறைச்சாலைகளுக்குச் செல்ல மாட்டோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்களே, நீங்கள் என்ன விஷயத்தைப் பற்றிக் கேட்க வேண்டுமோ, அதைப்பற்றிக் கேளுங்கள்.*

2018 ஜூன் 7]

திரு. கரி. இராமசாமி: *இதுபோன்று சிறைச்சாலைகளில் இருப்பவர்களை ஒருவர் தாக்குவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. சிறைச்சாலைகளுக்கு ** குற்றம் செய்தவர்களும் அங்கே இருக்கிறார்கள். சிறைச்சாலைகளில் போதிய பாதுகாப்பு வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *** என்பதெல்லாம் வேண்டாம். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். நீங்கள் கோவையில் நடந்த விஷயத்தைப் பற்றி மட்டும் பேசுங்கள். தகவல் கோரல் என்ற முறையில் உங்களை நான் பேச அனுமதித்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் இதுகுறித்து பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். இதுகுறித்து மட்டும் பேசி முடித்துவிடுங்கள். வேறு எதுவும் வேண்டாம்.*

திரு. கரி. இராமசாமி: *கோவை சிறைச்சாலையில் மிகப் பெரிய தவறு நடந்திருக்கிறது. அங்கே இருக்கின்ற அதிகாரிகள் சரியாகக் கண்காணித்தார்களா, இல்லையா? அங்கு விசாரணைக் கைதியே இப்படிப்பட்ட நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார். இதுகுறித்து நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவ்வளவுதான். மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, 5-6-2018 அன்று கோவை மத்திய சிறையில் விசாரணைக் கைதியாக இருந்த ரமேஷ் என்ற சிறைவாசி அந்தச் சிறைச்சாலையில் அனுமதிக்கப்பட்டு, மருத்துவர்களாலும், மன நல அலுவலர்களாலும் பரிசோதிக்கப்பட்டபோது, அவர் 30 ஆண்டு காலமாக மன நலம் பாதிக்கப்பட்டதற்காக மருந்து, மாத்திரைகள் எடுத்துக்கொண்டு வருபவர் என்பதை அறிந்து, சிறையிலே இருக்கின்ற மருத்துவமனையில் அவருக்கு பூரணமாக சிகிச்சை அளிக்கப்பட்டு, அதற்கென்று பிரத்யேகமாக ஒதுக்கப்பட்டிருக்கின்ற* Observation Block-ல் *அடைக்கப்பட்டு, தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வந்தார். அதேபோன்று, கோவை சிறையிலே விஜய் என்கிற 19 வயது விசாரணைக் கைதி தனது சகோதரருடன் ஏற்பட்ட தகராறு காரணமாகக் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலில்*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[திரு. சி.வி. சண்முகம்] [2018 ஜூன் 7

அதே சிறையிலே அடைக்கப்பட்டபோது, அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவரிடம் கேட்ட கேள்விகளுக்கு, தாமதமாக பதில் சொல்வது-slow response பிரச்சினை இருந்த காரணத்தால், அவரும் மன நிலை பாதிக்கப்பட்டிருந்ததால், அவருக்கும் மன நல அலுவலர்களாலும், மருத்துவர்களாலும் சிகிச்சை அளிக்கப்பட்டு, அதற்கென்று பிரத்யேகமாக இருக்கின்ற Observation Block-ல் அந்தச் சிறைவாசியும் அடைக்கப்பட்டிருந்தார்.

5-6-2018 அன்று மதிய உணவின்போது ரமேஷ் என்கிற சிறைவாசிக்கும், விஜய் என்கிற சிறைவாசிக்கும் ஏற்பட்ட வாய்த் தகராறில்,ரமேஷ் என்ற சிறைவாசி விஜய் என்ற சிறைவாசியினுடைய தாயாரைத் தரக் குறைவாகத் திட்டியதால் தகராறு ஏற்பட்டிருக்கிறது. அங்கிருந்த காவலர்கள் அவர்கள் இருவரையும் சமாதானப்படுத்தி, அவர்களை அப்புறப்படுத்தியிருக்கிறார்கள். பிறகு மரத்தடியில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்த ரமேஷ் என்கிற அந்த சிறைவாசியை, தனது தாயாரைத் திட்டிய கோபத்திலிருந்த, விஜய், ரமேஷைத் தாக்க வேண்டும் என்ற நோக்கத்தில், அங்கு மரத்தின் அடியில் இருந்த கல்லை எடுத்து, அங்கே ஓய்வெடுத்துக்கொண்டிருந்த ரமேஷின் தலையில் தாக்கினார். பலமாக தலையில் தாக்கப்பட்ட நிலையில் ரமேஷ் என்பவரை மருத்துவமனைக்குச் செல்லும்போது, அவர் வரும் வழியிலேயே இறந்து கொண்டுவரப்பட்டார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-35

இந்தச் சம்பவம் நடைபேற்றபோது பணியிலிருந்த, இதில் கவனக் குறைவாக இருந்த முனுசாமி என்ற முதன்மை தலைமைக் காவலர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சம்பவம் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல ஏதோ திட்டமிட்டு நடைபெற்ற சம்பவம் இல்லை. அவர்களுக்குள் ஏற்பட்ட வாய்த் தகராறில் ஏற்பட்ட ஒரு சம்பவம். கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் செய்தாரா, இல்லையா என்பது விசாரணையில்தான் தெரியவரும். கல்லால் தலையில் தாக்கியதில் ஏற்பட்ட பலத்த அடியால் அவர் உயிரிழந்திருக்கிறார். எது எப்படியிருப்பினும், அந்த சிறைவாசி இறந்தது வருத்தத்திற்குரியது. அதற்காக முதன்மை தலைமைக் காவலர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல சிறையிலே தாக்கப்பட்டு இறக்கக்கூடிய சம்பவங்கள் குறைவு. கடந்த ஆண்டு

2018 ஜூன் 7] [திரு. சி.வி. சண்முகம்]

ஒருவரும், இந்த ஆண்டு ஒருவரும்தான் இறந்திருக்கிறார்கள். கடந்த 2013 ஆம் ஆண்டிலிருந்து பார்த்தால் ஒவ்வொரு ஆண்டும் ஒருவர்தான் இறந்திருக்கிறார். அதுகூட நடக்கக் கூடாது என்பதற்காகதான் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. முதலிலே சிறைக்கு வருகின்ற சிறைவாசிகளின் மன அழுத்தத்தைப் போக்குவதற்காக மனநல அலுவலர்களை அரசு நியமித்திருக்கிறது. அவர்களுக்குத் தேவையான அனைத்து மருத்துவ வசதிகளையும் இந்த அரசு செய்துகொடுத்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் உறவினர்களுடன் பேசுவதற்கான வசதி வாய்ப்புகளையும் இந்த அரசு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. இப்படி பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருக்கிறது. இருந்தாலும், நடைபெற்ற இந்தச் சம்பவத்திற்கு துறைரீதியான நடவடிக்கைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூரில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், சுருக்கமாக என்னவென்று சொல்லுங்கள். விஷயத்தைச் சொல்லி முடியுங்கள்.*

திரு. உ. மதிவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் தொகுதியில், கீழ்வேளூர் பெருமாள் கோயில் வடக்கு வீதியைச் சேர்ந்த கணேசன் என்பவரும், அவருடைய தம்பி ராஜு என்பவரும் கடந்த 8-5-2018 ஆம் தேதியன்று மின்சாரம் தாக்கி இறந்துபோய்விட்டார்கள். இருவரும் அண்ணன்-தம்பிகள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அண்ணன், தம்பி இருவரும் இறந்துபோய்விட்ட நிலையில் வாடும் அவர்களது குடும்பத்தினருக்கு நிவாரண நிதி உதவி வழங்க வேண்டும். அதேநேரத்தில் (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் செய்திக்கு எல்லாம் நேரம் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) எனக்கு நேரம் இல்லை, உட்காருங்கள். போதும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். திரு. மதிவாணன், நீங்கள் மாண்புமிகு*